பஞ்சாப் நேஷனல் வங்கி
punjab national bank

கடன் மீட்பு நிர்வாகக் கிளை (ARMB) : எண்.448A, டாக்டர் நஞ்சப்பா ரோடு,
கோயம்புத்தூர் - 641 018. போன் : 0422-2231314, 0422-2231345, மொபைல் : 9963993409, மின்னஞ்சல் : cs4371@pnb.bank.in

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏலத்திற்கான பொது அறிவிப்பு : 03.12.2026 தேதி அன்று (காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை)

முன்வைப்புத் தொகை மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசித் தேதி மற்றும் நேரம் : 03.12.2026 தேதி அன்று, மாலை 3.00 மணி வரை

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9(1) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்–ஏல விற்பனை அறிவிப்பு.

பஞ்சாப் நேஷனல் வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) ஆகியோரிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட ஆக்கபூர்வ / கொள்நிலை / அடையாள சுவாதீனம் செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'எங்கு உள்ளதோ உள்ளபடி', 'என்ன உள்ளதோ உள்ளபடி', 'எப்படியுள்ளதோ உள்ள நிலையில்' விற்கப்படும். சொத்திற்கான குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை மற்றும் முன் வைப்புத் தொகை கீழே பட்டியலில் உள்ள விபரப்படியாகும்.

பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கிய வங்கிக்குத் தெரியவந்த ஏதேனும் வில்லங்கங்கள் குறித்த விபரம் : 1. Nil - சூரமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்து 04.11.2026 தேதியிட்ட வில்லங்கச் சான்றின்படி. 2. கோயம்புத்தூர், கடன் மீட்புத் தீர்ப்பாயம், டயரி எண்./1796/2024. 3. மாவட்ட நீதி மன்றம், நாமக்கல் O.S.No.169/2021.

பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் அட்டவணை

கிளையின் பெயர் மற்றும் கணக்கின் பெயர் மற்றும் கடன்தாரர்/உத்தரவாதமளித்தவர் பெயர் மற்றும் விலாசம்	பிணையப்பட்ட அசையாச் சொத்து விபரம் / உரிமையாளரின் பெயர் (சொத்தின் அடமானதாரர்/கள்)	அ) 2002 சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(2)ன் படியான கேட்பு அறிவிப்பு தேதி ஆ) நிலுவைத் தொகை இ) 2002 சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(4)ன் படியான சுவாதீனம் எடுத்த தேதி ஈ) சுவாதீனத்தின் தன்மை அடையாளம்/ கொள்நிலை/ஆக்கபூர்வ சுவாதீனம்	1) ரிசர்வ் விலை 2)முன்வைப்புத் தொகை (EMD) 3) ஏல மடங்குத் தொகை
கிளை : சேலம் கிளை (439500) (குற்போது கோயம்புத்தூர் ARMBக்கு மாற்றப்பட்டுள்ளது) **M/s.இன்லாண்ட் பாலிமர்ஸ்** மற்றும் **திரு.K.M.ராஜ் குமார்** **கடன்தாரர் :** **M/s.இன்லாண்ட் பாலிமர்ஸ்** 4/440, ஜாகீர் அம்மாபாளையம், பெங்களூர் மெயின் ரோடு–NH7, சேலம் – 636 002. **மேலும் :** 123, கென்னடி நகர் IIIவது வீதி, சூரமங்கலம், சேலம் – 636 002. **திரு.K.M.ராஜ் குமார் (M/s.இன்லாண்ட் பாலிமர்ஸ்–ன் உரிமையாளர் மற்றும் திரு.K.K.முத்துசாமியின் சட்டபூர்வ வாரிசுதாரர்),** 123, கென்னடி நகர் IIIவது வீதி, சூரமங்கலம், சேலம் – 636 002 **மேலும் :** 4/440, ஜாகீர் அம்மாபாளையம், பெங்களூர் மெயின் ரோடு–NH7, சேலம் – 636 002. **திரு.K.M.சுரேஷ் குமார் (திரு.K.K.முத்துசாமியின் சட்டபூர்வ வாரிசுதாரர்),** 123, கென்னடி நகர் IIIவது வீதி, சூரமங்கலம், சேலம் – 636 002 **மேலும் :** 4/440, ஜாகீர் அம்மாபாளையம், பெங்களூர் மெயின் ரோடு–NH7, சேலம் – 636 002. **உத்தரவாதமளித்தவர் ;** **திருமதி. லாவண்யா ராஜ்குமார்,** 123, கென்னடி நகர், 3வது வீதி, சூரமங்கலம், சேலம் – 636 002 **மேலும் :** 4/440, ஜாகீர் அம்மாபாளையம், பெங்களூர் மெயின் ரோடு–NH7, சேலம்–636 002.	**(அட்டவணைச் சொத்து) :** **திரு.K.M.ராஜ்குமார் (PAN:AEYPR0185B) மற்றும் திரு. K.M. சுரேஷ்குமார் (திரு. K.K.முத்துசாமியின் (லேட்) சட்டபூர்வ வாரிசுதாரர்) பெயரிலுள்ள சொத்து :** சேலம் பதிவு மாவட்டம், சேலம் சார் பதிவு மாவட்டம், சேலம் தாலூகா, போடிநாயக்கன்பட்டி கிராம சர்வே எண்.16/5ல் உள்ள, புன்செய் ஏக்கர்.0.71, தீர்வை ரூ.1.60 இதில் K.K.முத்துசாமியால் வாங்கப்பட்டு, அவருக்குச் சொந்தமாக உள்ள சொத்தின் **எல்லைகளும், அளவுகளும் கீழ்வருமாறு :** P.கிருஷ்ணமூர்த்தியின் நிலத்துக்கு மேற்கு, பெரியண்ணனின் மனை நிலத்துக்குக் கிழக்கு, இதே சர்வே எண்ணில் பழனியால் விடப்பட்டதும், தென்வடல் கோவிந்தராஜபுரம் செல்லும் 40 அடி சாலையில் சென்று சேர்வதுமான 10 அடி அகல கிழமேல் ரோட்டுக்கு தெற்கு மற்றும் சிந்து என்கின்ற பார்வதியம்மாள் வீட்டுக்கு வடக்கு. இவ்வெல்லைகளுக்குட்பட்ட மனையின் **அளவுகள் :** கிழமேல் 30 அடி, தென்வடல் 40 அடி, ஆக மொத்தம் 1200 சதுர அடி நிலத்துடன் அதில் கட்டப்பட்டுள்ள கட்டடமும், நிலத்தின் தென்கிழக்கு மூலையில் தோண்டப்பட்டுள்ள ஒரு கிணற்றில் முழுமையான பாதிப்பங்குடன், மேற்குப் பகுதியில் முழு உரிமையுடன் சர்வே எண்.16/4 ல் உள்ள புன்செய் ஏக்கர் 0.05 நிலத்திலடங்கிய கிணற்றிலிருந்து நீர் இறைக்கும் உரிமையுடன், 10 அடி அகல கிழமேல் ரோட்டின் வழி சொத்தின் உட்சென்று வெளிவரும் உரிமையும் சேர்ந்தது. மேற்படி சொத்து சூரமங்கலம் நகராட்சியில் தற்போதைய சேலம் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது. **அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் :** **11.672058, 78.122443**	**அ)** 04.06.2024 **ஆ) (i) கணக்கு எண்.4395008700002109, M/s. இன்லாண்ட் பாலிமர்ஸ் பெயரிலானது– 31.10.2026 வரை, ரூ.1,00,05,405.22 (மற்றும் 01.11.2026 தேதியிலிருந்து பின் வட்டி, பிற செலவுகள்)** **(ii) கணக்கு எண்.439500IB00000567, M/S. இன்லாண்ட் பாலிமர்ஸ் பெயரிலானது– 31.10.2026 வரை, ரூ.2,69,904.27 (மற்றும் 01.11.2026 தேதியிலிருந்து பின் வட்டி, பிற செலவுகள்)** **(iii) கணக்கு எண்.439500NC00000701, திரு. K.M.ராஜ்குமார் பெயரிலானது– 31.10.2026 வரை, ரூ.1,76,648.00 (மற்றும் 01.11.2026 தேதியிலிருந்து பின் வட்டி, பிற செலவுகள்)** **(iv) கணக்கு எண்.4395009900000210, திரு. K.M.ராஜ்குமார் பெயரிலானது– 31.10.2026 வரை, ரூ.36,69,314.57 (மற்றும் 01.11.2026 தேதியிலிருந்து பின் வட்டி, பிற செலவுகள்)** **மொத்தம் : ரூ.1,41,21,272.06* (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து ஒரு லட்சத்து இருபத்து ஓராயிரத்து இருநூற்று எழுபத்து இரண்டு மற்றும் பைசா ஆறு மட்டும்)** *** (மேற்படி கடன் வசதிகள் தவிர, M/s.இன்லாண்ட் பாலிமர்ஸின் உரிமையாளர், திரு. K.M.ராஜ்குமார், டெர்ம் லோன் கடன் பெற்றுள்ளார் (கணக்கு எண். 439500ND00000375) 31.10.2026 தேதியன்று இதன் நிலுவை ரூ.4,71,196.00 அதுவும் NPA ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளது)** **இ) 23.10.2024** **ஈ) அடையாளம்**	**1) ரூ.64,40,000/–** (ரூபாய் அறுபத்து நான்கு லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) **2) ரூ.6,44,000/–** (ரூபாய் ஆறு லட்சத்து நாற்பத்து நான்காயிரம் மட்டும்) **3) ரூ.20,000/–** (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) **மின் ஏலத் தேதி மற்றும் நேரம் :** **03.12.2026 (வியாழக்கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை**

மின்–ஏலத்திற்கான நிபந்தனை விபரங்கள்

இவ்விற்பனையானது பிணைய நலன் (அமலாக்க) விதிகள் 2002ல் சொல்லப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் கீழ்க் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டது.

1. சொத்துக்கள் 'எங்குள்ளதோ அங்கு', 'என்ன உள்ளதோ அது' மற்றும் 'உள்ளதுள்ளவாறே' என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

2. அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிணையச் சொத்தின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் நன்கு அறிந்த வகையில் சரியானது, எனினும் அதில் காணப்படும் எந்த ஒரு தவறு, விடுதல் மற்றும் திருத்தத்துக்குப் பொறுப்பாக மாட்டார்.

3. விற்பனையானது கீழே ஒப்பமிட்டுள்ள அலுவலரால் https://baanknet.com இணையதளத்தில் உள்ள மின் ஏல மேடையில் **03.12.2026 (வியாழக்கிழமை); காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை** நடத்தப்பெறும்.

4. விற்பனை தொடர்பான மேலும் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கீழ்க் குறிப்பிட்டுள்ள இணைய தளங்களைக் காணவும்.

https://baanknet.com & www.pnbindia.in

தேதி : 06.11.2026
இடம் : கோயம்புத்தூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்
பஞ்சாப் நேஷனல் வங்கி

சர்பாஸிச்சட்டம் 2002ன் கீழ் விதி 9(1)–ன் படியான சட்டப்பூர்வ விற்பனை அறிவிப்பு

'Dinamani'
Salem & Namakkal Edition
08-11-2026 - Sunday

26x16w